# 10 P

பதிவு எண். [ ]

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2019

## தமிழ்

நேரம் : 1.15 மணி — மதிப்பெண்கள் : 50

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5**

1. காய்ந்த இலையும், காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது

   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

   இ) தாளும் ஒலையும் ஈ) சருகும் சண்டும்

2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை

   அ) குலை வகை ஆ) மணிவகை இ) கொழுத்து வகை ஈ) இலை வகை

3. பெரிய மீசை சிரித்தார் – தொகையின் வகை.

   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

4. “சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி” – பாக்கம் என்பது

   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5. எந்தமிழ் நா என்பதைப் பிரித்தால் எவ்வாறு வரும்?

   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

   இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

**II. பொருத்துக. 5 x 1 = 5**

6. தாள் – கரும்பு
7. தண்டு – நெட்டி, மிளகாய்
8. கோல் – புளி, வேம்பு
9. கழி – கீரை, வாழை
10. அடி – நெல், கேழ்வரகு

**III. எவையேனும் ஐந்தனுக்கு விடையளி. 5 x 2 = 10**

11. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?
12. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
13. மலைபடுகடாம் குறிப்பு வரைக.
14. ஆற்றுப்படை – விளக்குக.
15. உயிரளபடை என்றால் என்ன? வகைகள் யாவை?
16. மூவகை மொழிகள் யாவை?
17. தொழிற்பெயர் என்றால் என்ன? வகைகள் யாவை?

**IV. எவையேனும் இரண்டனுக்கு விடையளி. 2 x 5 = 10**

18. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களைப் பாவலரேறு சுட்டுவன யாவை?
19. தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
20. காற்றின் பல்வேறு பெயர்களை எழுதுக.
21. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் செய்திகளை எழுதுக.

**V. எவையேனும் இரண்டனுக்கு விடையளி. 2 x 6 = 12**

22. தமிழ் சொல் வளம் குறித்து பாவாணர் கூறுவனவற்றை எழுதுக.
23. தொகை நிலைத் தொடர்களை விளக்கி எழுதுக.
24. தொகா நிலைத் தொடர்களை தொகுத்து எழுதுக.
25. விருந்தினரை உபசரிக்கும் முறை பற்றி நீவிர் அறிந்தவற்றை சொந்த நடையில் எழுதுக.

**VI. அடிமாறாமல் எழுதுக. 4 + 4 = 8**

26. ‘அன்னை மொழியே’ – எனத் தொடங்கும் பாடல்.
27. ‘சிறுதாம்பு தொடுத்த’ – எனத் தொடங்கும் முல்லைப் பாட்டுப் பாடல்.